<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 666/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | அம்ஜத் இப்ராஹிம் கான் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.02.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது விருதுநகர் நகராட்சி மற்றும் வட்டார பகுதியில் உணவு பாதுகாப்பு துறையில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2018 ம் ஆண்டு உடுமலை உணவு பாதுகாப்பு துறையில் பாதுகாப்பு அலுவலராக பணியில் இருந்த போது கடந்த 27. 06.2019 காலை 9.30 மணியளவில் எலையமுத்தூர் நியூ அக்சயா பேக்கரியில் சோதனை மேற்கொண்டேன் அங்கு சென்று நான் உணவு பாதுகாப்பு துறையில் இருந்து வந்திருப்பதாக கூறி நான் அறிமுகமாக அறிமுகம் செய்து கொண்டேன். பின்னர் உணவு பாதுகாப்பு துறையிலிருந்து உரிமம் பெற்றுள்ளிர்களா என்று நான் கேட்டதற்கு அவர்கள் உரிமம் பெற்றுளளதாகளய கூறி உரிமத்தை காட்டினார்கள்.

2 மேலும் அந்த கடையில் உள்ள உணவை சோதனை செய்து பார்த்ததில் எனக்க அங்கிருநத லூஸ் கண்டிசன் டீத்துாள் கலப்படம் உள்ளதோ என்று எனக்கு சந்தேகம் ஆனது. அதனால் அந்த டீத்துாளை உணவு மாதிரியாக

எடுக்கலாமா என்று கேட்டதற்கு அவர் அதனை எடுக்கலாம் என்று கூறினார். அதற்காக படிவம் 5 A இரண்டு பிரதிகளை தயார் செய்து சம்பவ இடத்திலேயே ஒரு நகலை உரிமையாளரிடம் கொடுத்தேன். பொது சாட்சியாக கணேசன் என்பவரை சாட்சி கையொப்பம் பெற்று வழங்கினேன். படிவம் 5ஏ அசா.ஆ 1 என குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னிட்டு டீத்துாள் லூஸ் கண்டிசனை 4 சமபாகமாக பிரிப்பதற்காக டீத்துாள் விலையை கேட்டேன். அதற்கு அவர் ரூ.230/– என கூறினார். நான் 4* 1 கிலோ டீத்துாள்ளிற்கு ரொக்க ரசீது தயாரித்து சாட்சி கசேணசனிடம் கையொப்பம பெற்று பண்த்தை கொடுதது 4 கிலோ டீத்துாளை உணவு மாதிரியாக எடுத்தேன். ரொக்க ரசீது அசா.ஆ 2 என குறியீடு செய்யப்படுகிறது.

3. வாங்கிய 4 டீத்துாளை மாதிரியை சமமாக பிரித்து நான்கு லேபிள் தயார் செய்து ஒவ்வொரு பேக்கிகன் மேல் ஒட்டி பார்சல் செய்து அதன் மேல் கடையை உரிமையாளர் கையொப்பம் மற்றும் என் கையொப்பம் இட்டு மீண்டும் ஒரு கெட்டியான காகிதத்தால் தனிதனியாக ஒரு பொட்டலம் ஆக்கினேன். இதன்மீது மாவட்ட நியமன அலுவலரால் வழங்கப்பட்ட கோடு எண் 24027495 வ. எண் 702018 என்ற வெள்ளை நிற தாளிளை ஒவ்வொரு பொட்டலத்தின் மீதும் மேலிருந்து கீழாக பசை தடவி ஒட்டினேன். பின்னர் ஒட்டப்பட்ட பேப்பர் சிலிப்பிலும் மற்றும் பொட்டலத்திலும் கடையின் உரிமையாளர் கையொப்பம் பதியும் மாறு கையொப்பம் பெற்றேன். பின்னர ஒவ்வொரு உணவு மாதிரியின் மேலிருந்து கீழாக நூல் கொண்டு நான்கு பொட்டலங்களிலும் இறுக கட்டி முடிச்சி இட்டேன்.

4. மேலும் பொட்டலங்களில் நூல் முடிச்சிகளில் எனது அரக்கு உலோக முத்திரை பதித்து அதற்கான படிவம் தயாரித்து ரசீது தயார் செய்தேன். 4 உணவு பொட்டலங்களை 1,2,3,4 என வரிசைப்படுத்தி 4 வது பொட்டலத்தை உரிமையாளரே தனியார் உணவு ஆய்வகத்திற்கு அனுப்ப கொள்ளலாம் என்று முன்னுரிமை கொடுத்தத போது அவர் அதை வேண்டாம் என்று கூறினார். டீத்துார் டஸ்ட் தயாரிப்பு நிறுவனத்தின் கொள்முதல் ரசீது உள்ளதா என்று உரிமையாளரிடம் கேட்ட போது அவர் ரசீது இல்லை என்று கூறிவிட்டார். மேலும் ஏதாவது தவறு நடந்தால் நானே முழு பொறுப்பையும் ஏற்று கொள்வதாக எழுதி கொடுத்தார். முழு பொறுப்பு என எழுதி கொடுத்த கடிதங்கள் – 3 எண்ணிக்கை அசா.ஆ 3 என குறியீடு செய்யப்படுகிறது. உணவு விற்பளையாளரின் வாக்குமூலம் அசா.ஆ 4 என குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்னர் உணவு மாதிரி 1 பாகத்தையும் உணவு படிவங்கள் 6 தயாரித்துபகுப்பாய்விற்கு அனுப்ப அன்றைய தினமே மதுரை உணவு

பகுப்பாற்விற்கு பார்சல் மூலம் அனுப்பி ரசீது பெற்று கொண்டேன். படிவம் 6 அசா.ஆ 5 என குறியீடு செய்யப்படுகிறது. நியமன அலுவருக்கு கொடுத்த கடிதம் அசா.ஆ 6 என குறியீடு செய்யப்படுகிறது. மாதிரிஅரக்கு முத்திரை பதித்த தாள் அசா.ஆ 7 என குறியீடு செய்யப்படுகிறது. உணவு மாதிரி அனுப்பியது போக மீதம் இருந்த 3 பொட்டலங்களையும் பகுப்பாய்விற்கும் அனுப்பிய விவரத்தையும் மாவட்ட நியமன அலுவலருக்கு தகவல் கொடுத்து அன்றைய தினமே நேரில் சென்று ஒப்படைத்து ஒப்புகை கடிதம் பெற்றுக் கொண்டேன். அந்த ஒப்புகை கடிதம் அசா.ஆ 8 என குறியீடு செய்யப்படுகிறது.

7. பின்னர் நான் 27.07.2018 ம் அன்று என்னால் எடுத்து அனுப்பப்பட்ட டீத்துாள் லூஸ் கண்டிசனை மதுரை உணவு பகுப்பாய்வாளரால் பகுப்பாய்வு செய்யப்பட்ட கடந்த 10.06.2019 ம் தேதியிட்ட முகப்பு கடிதம் கொ்ண்டு மேற்படி உணவு மாதிரியானது பாதுகாப்பற்ற முறையில் உள்ளது என்று நியமண அலுவருக்கு அறிக்கை வரப்பட்டது. படிவம் 6 மாதிரி அரக்கு முத்திரை பதித்த அறிக்கை அனுப்பியதற்கான ரசீது அசா.ஆ 9 என குறியீடு செய்யப்படுகிறது. உணவு பகுப்பாய்வின் அறிக்கை அசா.ஆ 10 என குறியீடு செய்யப்படுகிறது.

8. மாவட்ட நியமண அலுவலருக்கு 13.06.2019 ம் தேதி அறிக்கை கிடைக்கப்பெற்ற உடன் இது குறித்து தகவலை அனுப்பி தங்களிடம் இருந்து எடுக்கப்பட்ட உணிவு மாதிரியை அரசால் பரிந்துரை செய்யப்பட் வேறு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய விரும்பினாரல் பரிசோதனைக்குரிய தொகையுடன் 30 நாட்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம் என்று நியமண அலுவலர் கடையின் உரிமையாளர் ராமநாதனுக்கு கடிதம் அனுப்பினார். அந்த கடிதம் அசா.ஆ 11 என குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அந்த படிவத்தை எனக்கு அனுப்பினார்கள்.

9. குற்ற வழக்கு தொடர அனுமதி வேண்டி நியமண அலுவலருக்க நான் கொடுததேன். அவர் இசைவு கடிதம் வேண்டி அவர் ஆணை அலுவலருககு அனுப்பினார் அந்த கடிதம் அசா.ஆ 12 என குறியீடு செய்யப்படுகிறது. குற்ற வழக்கு தொடர 26.09.2019 ம் தேதி அனுமதி வழஙகப்பட்டது நான் அந்த சமயத்தில் பணி மாறுதல் ஆகிவிட்டதால் எனக்கு பின் வந்த உணவு பாதுகாவலர் வழககை தொடர்ந்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அக்சயா பேக்கரி எலையமுத்துார் பிரிவு ஆர்ட்ஸ் காலேஜ் அருகில் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக அங்கு ஆடள் நிறைய இருபபார்கள் என்றால் சரிதான். நீங்கள் சோதனைக்கு செல்லும் போது அங்கு பேக்கரியில் டீசாப்பிட ஆடகள் இருந்தார்களஎன்றால் இருந்தார்கள. எத்தனை பேர் சென்றிர்கள் என்றால் நான் மட்டும். அக்சயா பேக்கரி ஒட்டி

மறறொரு பேக்கரி உள்ளது என்றால் சரிதான். கடையில டீத்தூள் விற்பனைக்காக வைத்திருந்தால் என்றால் டீ போடவைத்திருந்தார். கடையில் டீ சாப்பிட்ட நபர்கள் யாரும் டீ சரியில்லை கலப்படமாக உள்ளது என்று புகார் சொலல்வில்லை என்றால் சரிதான். AVT 3 Roses உள்ளிட்ட நிறுவனங்கள் கடைக்கு என்று தனியாக டீத்தூள் தயாரிக்கிறார்கள் என்றால் தெரியாது,

2. பொதுவாக 1 கிலோ எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 250 கிட்ட இருக்கும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும கிலோ 1000 க்கு மேல் என்றாலும் சரியல்ல. சாட்சி கணேசன் கடையில் வேலை செய்தவரா என்றால் அருகில் இருந்தவர் பொது சாட்சியாக போட்டேன், வேலை செய்தது பற்றி ஞாபகம் இல்லை. கணேசன் முகவரில் என்றால் கடை முகவரிதான் போட்டுள்ளிர்கள் என்றால் சரிதான். பொதுவாக வெளி நபர்களாக அவர்களுக்கு தனி விலசாம் இ்ருக்கும் என்றாலும அதை போடவி்லை என்றாலமூ சரிதான்.

3. நீங்கள் கடையில் எவ்வளவு நேரம இருந்திர்கள் என்றால் 2 மணிநேரம். டீத்தூள் கடையில் எடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்காக பில்கள் பற்றி கேட்கவில்லை என்றால் நான் கேட்டேன். பொதுவாக 2-3 டீத்தூள் கலந்துதான் டீ போடுவர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மாவட்ட நியமண அலுவலர் கையொப்பம் போட்டதை எப்போது பெற்று வைத்திர்கள் என்றால மாதத்திற்கு எனக்கு டார்கெட் உள்ளது அவர் கையொப்பம் இட்டு வழங்கிவிடுவார். இந்த உணவுமாதிரி எடுப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பு. வெற்று தாளில் கையொப்பம் இட்டு தர மாட்டார்கள் எனறால் வெற்று தாள் இல்லை. சிலிப்பில் அக்சயா பேக்கரி என்று பின்னிட்டு தான் நிரப்பினிர்கள் என்றால் அதில் பேக்கரி பெயர் வராது.

4. பொதுவாக அந்த சிலிப்ப அனைத்து உணவு பாதுகாபப்ஹற அலுவலருக்கு தருவார்கள் என்றால் தருவார்கள். அதிகபட்சம் டீத்தூளின் பயன்படுத்துவதற்கு வாழ்நாள் என்ன என்றால் எனக்கு தெரியாது. பகுப்பாயவாளரிடம் கேட்க வேண்டும. எத்தனை வருடமாக உ ணவு அலுவலராக உள்ளிர்கள் என்றால் 14 வருடம். 14 வருடம் உணவு அலுவலரகா இருந்து டீத்தூளின் பயன்படுத்துவதற்கு வாழ்நாள் தெரியவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. டீத்தூளின் பயன்படுத்தும் அதிக காலம் ஓராண்டு என்றால் பகுப்பாயவாளரிடம் கேட்க வேண்டும் உணவு மாதிரி கொடுதது எத்தனை நாளில பகுப்பாய்பு செய்ய வேணடும் என்றால் 14 நாட்கள். இந்த வழக்கில் 14 நாட்களில் பகுப்பாய்வு செய்யவில்லை என்றால் சரிதான. எவ்வளவு நாலள் காலதாமதாக பகுப்பாய்வு செய்யப்பட்டது என்றால் 11 மாதம்.

பொதுவாக காற்று புகாத பேப்பரில் போட்டு வைத்த உணவு 11 மாதத்தில் கெட்டு போக வாய்ப்பிருக்கும் என்றால் வாய்ப்புகள் குறைவு, கெட்டு போக வாய்ப்பு இல்லை, தரம் குறையலாம்.

5. இவ்வழக்கில் கடையின் உரிமையாளர் டீத்தூள் எப்போது வாங்கப்பட்டது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் கேட்கவில்லை. பில்கள் வாங்கியுள்ளார்களா என்று கேட்டேன். வழக்கிற்காக பொய்யாக சொலகிறிர்கள் என்றாலும் அனைத்து டீத்தூளும் கம்பெனி டீத்தூள்கள் என்றாலும் தவறு . வெற்று தாளில் கையெழுத்து வாங்கியுள்ளிர்கள் என்றால் இல்லை. 4 கிலோ டீத்தூள் சேர்த்து ரூ.230/– கொடுத்திர்கள் என்றால் ஆமாம். ரூ.230/– என்பது டீததூள் விலையை விட குறைவு என்றால் அவர் கூறிய விலையை தான் நான் கொடுததேன். வழக்கிற்காக பொய்யாக சொலகிறிர்கள் என்றால் சரியல்ல.

6. நீங்கள் கணேசன் தவிர வேறு யாரையும் சாட்சியாக போடவில்லை என்றால் இல்லை. படிவம் அனைத்தும் கடையில் வைத்து தயார் செய்யப்பட்டது படிவம் 5 ஏ மற்றும ரொக்க ரசீது கடையில் வைத்து தயாரிக்கப்ட்டது படிவம் 6 என அலுவலகத்தில வைத்து தயாரிக்கப்பட்டது. கடையில் அவரிடம் கையொப்பம் வாங்கினிர்களா என்றால் வாங்கினேன். படிவம் மற்றும் ரசீது வாங்க எவ்வளவுநேரம் ஆனது என்றால் இந்த நடவடிக்கை முடிய சுமார் 2 மணிநேரம் காலை 9.30 மணிமுதல் 11.30 மணி வரை. வழக்கில சொன்ன மாதிரி உணவு பாதுகாப்பிற்கு அவர் அனைத்து பொறுப்பு எடுத்ததாக சொன்ன நிலையில் சொல்வது பொய் என்றாலும் கையெழுத்தும் படிவமும் தங்களால் பூர்த்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. டீத்தூள் சரியில்லை என்பது அதன் தரமின்மையை குறிக்கும் என்றால் சரிதான். தரமின்மை என்பது தரம் குறைவானது என்றும் Unsafe என்பது பாதுகாப்பற்றது என்றும் குறிக்கும்.

6. பொதுவாக குறிப்பிட்ட காலக்கெடுக்குள் பகுப்பாய்வு செய்து இருந்தால் உண்மை தன்மை தெரிந்திருககும் என்றால் அது பகுப்பாய்வாளரிடம் கேட்க வேண்டும். சொன்ன மாதிரி சொன்ன இடத்தில நீங்கள் சொன்னது போல் டீத்தூள் பயன் படுத்தவில்லை என்றாலும் மேல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக வழக்கு போட்டுளளிர்கள என்றாலும் சரியல்ல. நீங்கள் சொலவது போல் 4 கிலோ டீத்தூள் பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.